**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் கந்தர்வகோட்டை.**
**மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு**
**ROC.No.814/2020/RG/F1, P.Dis. No.36/2021 Dated 07.04.2021**
**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 13/2021**
**வழக்கின் சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த காலம் | : எதிரிகள் மாண்புமிகு புதுக்கோட்டை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் கு.ப.ம.எண். 1378/2021 ல் 08.04.2021 ம் தேதியிட்ட உத்தரவின் படி முன்பிணை பெற்று, இந்நீதிமன்றத்தில் 09.04.2021 ம் தேதியன்று சரணடைந்து பிணையில் சென்றுள்ளனர். |
| 2. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | : 21.12.2021 |
| 3. | குற்றம் குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | : 20.05.2022 |
| 4. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : எதிரிகள் மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் BNSS பிரிவு 359-ன் படி CMP.No.306/2026 ல் தாக்கல் செய்யப்பட்ட மனு 07.04.2026 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.<br>எதிரிகள் தரப்பில் BNSS பிரிவு 348-ன் படி CMP.No.305/2026 ல் தாக்கல் செய்யப்பட்ட மனு 07.04.2026 ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது<br>அரசுத் தரப்பில் BNSS பிரிவு 348-ன் படி CMP.No.324/2026 ல் தாக்கல் செய்யப்பட்ட மனு 18.04.2026 ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது |

| | | | |
|---|---|---|---|
| 5. | அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள் | : | **முதல் விசாரணை** / **குறுக்கு விசாரணை**<br>அ.சா.1– 04.11.2025 / 04.11.2025/ 07.04.2026<br>அ.சா.2– 04.11.2025 / 04.11.2025/ 07.04.2026<br>அ.சா.3– 20.01.2026 / 20.01.2026<br>அ.சா.4– 18.04.2026 / 18.04.2026 |
| 6. | பிரிவு 351(1)ஆ BNSS இன் கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 22.04.2026 |
| 7. | எதிரிகள் தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டநாள்: | | இல்லை |
| 8. | தலைமறைவு எதிரிகள்பற்றியவிவரம் | : | இல்லை |
| 9. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கபட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | : | இல்லை |

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.04.22 17:10:41 -0400

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வகோட்டை**
**முன்னிலை: திரு. நா.சிவபழனி, B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கந்தர்வகோட்டை.
**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22 ஆம் நாள் புதன் கிழமை**
திருவள்ளுவராண்டு 2056 ஸ்ரீபராபவ வருடம் சித்திரை திங்கள் 09 ம் நாள்
**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 13/2021**
**(CNR. No. TNPD11000056-2021)**

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சிசி.எண்.13/2021 |
| 2 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | ஆதனக்கோட்டை காவல் நிலையம்<br>குற்ற எண். 59/2021 |
| 3 | குற்றமுறையிடுபவர் | காவல் ஆய்வாளர்<br>ஆதனக்கோட்டை காவல் நிலையம் |
| 4 | எதிரிகளின் விபரம்<br>பெயர்<br>வயது<br>தந்தையின் பெயர்<br>குடியிருப்பு | 1. மாரிமுத்து, வயது 52/2021<br>த/பெ.கருப்பையா,<br><br>2. ஐயப்பன், வயது 23/2021<br>த/பெ.மாரிமுத்து,<br><br>3.அஜித், வயது 20/2021<br>த/பெ.மாரிமுத்து,<br><br>4.ராமராஜ், வயது 30/2021<br>த/பெ.அண்ணாதுரை<br><br>**எதிரிகள் விசிப்பது :-**<br>பன்னிரெண்டாம்பட்டி,<br>ஆதனக்கோட்டை அஞ்சல்,<br>புதுக்கோட்டை தாலுகா மற்றும் மாவட்டம் |
| 5 | சம்பவ நாள் | 30.03.2021 |
| 6 | முறையீடு | 30.03.2021 |
| 7 | கைது | எதிரிகள் முன்பிணை பெற்றுள்ளனர். |
| 8 | பிணையில் விடுவித்தல் | எதிரிகள் மாண்புமிகு புதுக்கோட்டை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் கு.ப.ம.எண். 1378/2021ல் 08.04.2021ம் தேதியிட்ட உத்தரவின் |


SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.04.22 17:10:46 -0400

| | | |
|---|---|---|
| | | படி முன்பிணை பெற்று, இந்நீதிமன்றத்தில் 09.04.2021ம் தேதியன்று சரணடைந்து பிணையில் சென்றுள்ளனர். |
| 9 | விசாரணை துவக்கம் | 04.11.2025 |
| 10 | விசாரணை முடிவு | 18.04.2026 |
| 11 | தண்டனை அல்லது உத்தரவு | முடிவாக, 1 வது எதிரி சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(2) இதசவின் கீழும், 2 முதல் 4 எதிரிகள் சட்டப்பிரிவுகள் 324, 506(2) இதசவின் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, எதிரிகளை குவிமுச பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 12 | தீர்ப்புரை நகலை வழங்குவது அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் மீதான காண் முடிவு | -- |
| 13 | கால தாமததிற்கான விளக்கம் | அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க காலதாமதம் |

இவ்வழக்கு கடந்த 22.12.2021ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 21.04.2026ம் தேதி என் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக குற்றத்துறை அரசு உதவி வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.V.S.முருகேசன், B.A., B.L.** அவர்களும் முன்னிலையாகியும் இருதரப்பு வாதங்களைக் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.



SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2026.04.22 17:10:50 -0400

**தீர்ப்புரை**

**2. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

கடந்த 30.03.2021ம் தேதி மாலை 06.45 மணியளவில் பட்டியல் சாட்சி–1 ரமேஷ் என்பவர் அவரது வீட்டு வாசலில் கடலை காயப்போட்டுக் கொண்டிருந்தபோது , அங்கு வந்த 1வது எதிரியின் ஆடு அந்த கடலையை தின்றுள்ளது. அதை பார்த்த பட்டியல் சாட்சி–1 ஆட்டை விரட்டுங்க என்று சொன்னபோது, 1வது எதிரி அப்படில்லாம் விரட்ட முடியாது அப்படித்தான் மேயவிடுவேன்டா தேவுடியா பயலே என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டி கையில் வைத்திருந்த அருவாளால் பின்பக்க தலையில் அடித்தும், 2வது எதிரி அருகில் கிடந்த கம்பை எடுத்து பட்டியல் சாட்சி–1 இன் பல்லில் அடித்தும், 3வது எதிரி கம்பால் இடது பக்க தோள்பட்டையிலும் வலது பக்க தொடையிலும் அடித்தும், 4வது எதிரி கம்பால் பட்டியல் சாட்சி–1 இன் பின்பக்க முதுகில் அடித்தும் சாதாரண காயத்தை ஏற்படுத்தியும், எதிரிகள் அனைவரும் கொல்லாமல் விடமாட்டோம் என கொலைமிரட்டல் விடுத்தும் குற்றம் புரிந்துள்ளனர். எனவே, 1வது எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(2) இதசவின் கீழும், 2 முதல் 4 எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 324, 506(2) இதசவின் கீழும் ஆதனக்கோட்டை காவல் ஆய்வாளர் குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, எதிரிகளுக்கு குவிமுச பிரிவு 207ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிகளுக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.

**4. குற்றச்சாட்டு:–**

அரசுத்தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள முகாந்திரங்கள் எதிரிகள் குற்றம் புரிந்திருப்பார்கள் என கருதவும், கருத்தில் கொண்டு செயலாற்றவும் வழிவகுப்பனவாக தெரிந்தமையால், 1வது எதிரிக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(2)



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.04.22 17:10:55 -0400

இதசவின் கீழும், 2 முதல் 4 எதிரிகளுக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 324, 506(2) இதசவின் கீழும் குற்றச்சாட்டு வனைந்து எதிரிகளுக்கு படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்து தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று கூறினர். எனவே வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

5. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் 1 முதல் 9 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. எதிரிகள் மற்றும் நிகழ்நிலை புகார்தாரர்கள் தரப்பில் BNSS பிரிவு 359-ன் படி CMP.No.306/2026 இல் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்திய தண்டனை சட்டப்பிரிவு 294(b)இன் படியான குற்றம் சமரசம் செய்து கொள்ள முடியாத குற்றம் என்பதால் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

**அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

7. வழக்கு சம்பவத்தில் காயமுற்று புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த அ.சா.1 ரமேஷ் என்பவர் ஆதனக்கோட்டை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் பட்டியல் சாட்சி-8 தமிழ்வாசகன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார். மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. உதவி ஆய்வாளர் மேற்படி புகார் வாக்குமூலத்தைப் பெற்று நிலைய குற்ற எண்.59/2021ல், சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(2) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து அ.சா.ஆ.3 கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். பின்னர் வழக்கின் கோப்பினை மேல்விசாரணைக்காக பட்டியல் சாட்சி-8 காவல் ஆய்வாளர் ஞானவேலன் என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார்.



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.04.22 17:11:01 -0400

8. காவல் ஆய்வாளர் இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, 31.03.2021ம் தேதி காலை 06.30 மணியளவில் சம்பவயிடம் சென்று அ.சா.3 சுப்பிரமணியன் மற்றும் பட்டியல் சாட்சி–6 சங்கர் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.2 சுரேஷ் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். சாட்சிகளை விசாரணை செய்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால், எதிரிகளை தேடி வந்த நிலையில், எதிரிகள் கடந்த 08.04.2021ம் தேதி மாண்புமிகு புதுக்கோட்டை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் கு.ப.மனு எண்.1378/2021 இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி முன்பிணை பெற்று நீதிமன்றத்தில் சரணடைந்து உரிய பிணையில் சென்றுள்ளதால், எதிரிகளை கைது செய்யவில்லை.

9. பட்டியல் சாட்சி–7 மருத்துவர் ராஜேஷ்குமார் என்பவர் வழக்கு சம்பவத்தில் காயமுற்ற அ.சா.1 ரமேஷ் என்பவருக்கு சிகிச்சையளித்து அ.சா.ஆ.5 விபத்து பதிவேடு மற்றும் அ.சா.ஆ.6 காயச்சான்று வழங்கியுள்ளார். பின்னர், காவல் உதவி ஆய்வாளர் இவ்வழக்கின் விசாரணை முடித்து, வழக்கின் கோப்பினை பார்வையிட்டு எதிரிகளுக்கு எதிராக சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(2) இதசவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார். அ.சா.4 மாலதி ஆதனக்கோட்டை காவல் நிலைய காவல் ஆய்வாளர் வழக்கு கோப்பினை பார்வையிட்டு வழக்கின் புலன் விசாரணை குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

10. இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

11. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து BNSS பிரிவு 351(1)(ஆ)–ன் படி வினவியபோது எதிரிகள் அதனை மறுத்து பொய்சாட்சியம் என்றனர். எதிரிகள் தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை.



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.04.22 17:11:06 -0400

**12. விவாதம்:–**

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில், அரசுத்தரப்பு சாட்சிகள் மூலம் குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு தகுந்த தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இதனை மறுத்து இவ்வழக்கில் அரசுத்தரப்பில் எதிரிகள் மீதான குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**13. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:–**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவெனில் எதிரிகள் மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றமானது விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் எந்த விதமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

**தீர்வு**

14. இருதரப்பும் கேட்கப்பட்டது. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களும், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

15. அரசு தரப்பில், கடந்த 30.03.2021ம் தேதி மாலை 06.45 மணியளவில் அ.சா.1 அவரது வீட்டு வாசலில் கடலை காயப்போட்டுக் கொண்டிருந்தபோது , அங்கு வந்த 1வது எதிரியின் ஆடு அந்த கடலையை தின்றதாகவும், அதை பார்த்த அ.சா.1 ஆட்டை விரட்டுங்க என்று சொன்னபோது, 1வது எதிரி அப்படியெல்லாம் விரட்ட முடியாது அப்படித்தான் மேயவிடுவேன்டா தேவுடியா பயலே என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டி கையில் வைத்திருந்த அருவாளால் பின்பக்க தலையில் அடித்ததாகவும், 2வது எதிரி அருகில் கிடந்த கம்பை எடுத்து பட்டியல் சாட்சி–1 இன் பல்லில் அடித்ததாகவும், 3வது எதிரி கம்பால் இடது பக்க தோள்பட்டையிலும் வலது பக்க தொடையிலும் அடித்ததாகவும், 4வது எதிரி கம்பால் பட்டியல் சாட்சி–1 இன் பின்பக்க முதுகில்



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.04.22 17:11:13 -0400

அடித்தும் சாதாரண காயத்தை ஏற்படுத்தியதாகவும், எதிரிகள் அனைவரும் கொல்லாமல் விடமாட்டோம் என கொலைமிரட்டல் விடுத்ததாகவும் எதிரிகள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

16. வழக்கு சம்பவத்தில் காயமுற்று புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த அ.சா.1 ரமேஷ் என்பவர் ஆதனக்கோட்டை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் பட்டியல் சாட்சி–8 தமிழ்வாசகன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார். மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. உதவி ஆய்வாளர் மேற்படி புகார் வாக்குமூலத்தைப் பெற்று நிலைய குற்ற எண்.59/2021ல், சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(2) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து அ.சா.ஆ.3 கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார்.

17. வழக்கு சம்பவம் குறித்து புகார் வாக்குமூலம் அளித்துள்ள ரமேஷ் என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் வழக்கு சம்பவம் குறித்து சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், பின்னிட்டு அ.சா.1 ரமேஷ் தனது குறுக்கு விசாரணையில், "நான் முதல் விசாரணையில் சொல்லியவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் சரிதான். என்னிடம் பெற்ற புகார்வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றாலும் எழுதப்படாத வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்றாலும் சரிதான். எதிரிகள் எங்களை அசிங்கமாக பேசவும் இல்லை, தாக்கவும் இல்லை, கொலைமிரட்டல் விடுக்கவில்லை என்றால் சரிதான். நாங்களும் எதிரிகளும் ஊர்முக்கியஸ்தர்கள் முன்னிலையில், சமாதானம் ஆகி, நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்துள்ளதால், எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதில்லை என்றால் சரிதான்." என்று தனது முதல் விசாரணைக்கு சாட்சியத்திற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

18. வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.2 சுரேஷ் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் வழக்கு சம்பவம் குறித்து சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், பின்னிட்டு அ.சா.2 சுரேஷ் தனது குறுக்கு விசாரணையில், நான் முதல் விசாரணையில் சொல்லியவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் சரிதான். எதிரிகள் எங்களை அசிங்கமாக பேசவும் இல்லை, தாக்கவும் இல்லை, கொலைமிரட்டல் விடுக்கவில்லை என்றால் சரிதான். நாங்களும் எதிரிகளும் ஊர்முக்கியஸ்தர்கள் முன்னிலையில், சமாதானம் ஆகி, நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்துள்ளதால், எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியதில்லை என்றால் சரிதான்" என்று தனது முதல் விசாரணைக்கு சாட்சியத்திற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

19. அ.சா.4 மாலதி காவல் ஆய்வாளர் வழக்கு கோப்பின் அடிப்படையில் வழக்கின் புலன் விசாரணை குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அவர் தனது சாட்சியத்தில், காவல் உதவி ஆய்வாளர் தமிழ்வாசகன் என்பவர் இவ்வழக்கில் புகார் வாக்குமூலத்தைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளது குறித்தும், காவல் ஆய்வாளர் ஞானவேலன் என்பவர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளது குறித்தும், வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

20. இவ்வழக்கில் எதிரிகளும், நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்து, அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்திற்கு முற்றிலும் முரணாக சாட்சியமளித்துள்ளார். வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது முதல் விசாரணை சாட்சியத்திற்கும், அரசுத்தரப்பு வழக்கிற்கும் முரணாக சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், இருதரப்பினரால் சமாதான மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தினை மட்டுமே வைத்து எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு அரசு தரப்பில்



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.04.22 17:11:24 -0400

நிரூபிக்கப்பட்டதாக கருத முடியாது. எனவே இவ்வழக்கில் அரசுத்தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**21. முடிவாக, 1 வது எதிரி சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(2) இதசவின் கீழும், 2 முதல் 4 எதிரிகள் சட்டப்பிரிவுகள் 324, 506(2) இதசவின் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, எதிரிகளை குவிமுச பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

22. வழக்குச் சொத்து இல்லை. எதிரிகள் எழுதிக்கொடுத்துள்ள பிணைய பத்திரங்கள் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 22.04.2026 ம் தேதியில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2026.04.22 17:11:32 -0400

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**அரசுத்தரப்பு சாட்சிகள்:-**

| **அரசு தரப்பு சாட்சிகளின் வரிசை** | **சாட்சிகளின் பெயர்** | **சாட்சிகளின் விபரம்** |
|---|---|---|
| அ.சா.1 | திரு. ரமேஷ் | புகார்தாரர் |
| அ.சா.2 | திரு. சுரேஷ் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திரு. சுப்பிரமணியன் | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.4 | திருமதி. மாலதி | கூடுதல் சாட்சி (காவல் ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| **சான்று ஆவணங்களின் வரிசை** | **தேதி** | **சான்றாவணங்களின் விபரம்** | **யாரால் நிரூபிக்கப்பட்டுள்ளது** |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 04.11.2025 | புகார் வாக்குமூலம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 20.01.206 | பார்வை மகஜர் | அ.சா.3 |
| அ.சா.ஆ.3 | 18.04.2026 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.4 |
| அ.சா.ஆ.4 | 18.04.2026 | மாதிரி வரைபடம் | அ.சா.4 |
| அ.சா.ஆ.5 | 18.04.2026 | அ.சா.1 க்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு | அ.சா.4 |
| அ.சா.ஆ.6 | 18.04.2026 | அ.சா.1 க்கு வழங்கப்பட்ட காயச்சான்று | அ.சா.4 |

**அரசு தரப்பு சான்று பொருட்கள்:–** இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்::–** இல்லை

**குறிப்பு:–**

1. எதிரிகள் மாண்புமிகு புதுக்கோட்டை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் கு.ப.ம.எண். 1378/2021ல் 08.04.2021ம் தேதியிட்ட உத்தரவின் படி முன்பிணை பெற்று, இந்நீதிமன்றத்தில் 09.04.2021ம் தேதியன்று சரணடைந்து பிணையில் சென்றுள்ளனர்.

2. சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. இவ்வழக்கின் தீர்ப்பு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் வழக்கு சொத்து இல்லை.

5. வழக்கின் தீர்ப்பு நகல் மாண்பமை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் புதுக்கோட்டை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.04.22 17:11:37 -0400

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**